**செய்தி வெளியீடு எண்:1175** **நாள்:22.11.2021**

**திருப்பூரில் நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை – 22.11.2021**

அரசின் நலத்திட்டங்கள் வழங்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு தலைமைப் பொறுப்பேற்றுள்ள தமிழகத்தின் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களே!

விழாவில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களே!

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களே!

மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களே!

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்களே!

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் அவர்களே!

நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் ஒன்றிய அமைச்சர் திரு. ஆ. இராசா அவர்களே!

திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.எஸ். சுப்பராயன் அவர்களே!

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கணேசமூர்த்தி அவர்களே!

பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சண்முகசுந்தரம் அவர்களே!

மாநிலங்களவை உறுப்பினர் திரு. அந்தியூர் செல்வராஜ் அவர்களே!

சட்டப்பேரவை உறுப்பினர் திரு. செல்வராஜ் அவர்களே!

மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே! அலுவலர்களே!

பத்திரிகை, ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே! சகோதரர்களே!

மகளிர் சுய உதவிக்குழுவைச் சார்ந்திருக்கக்கூடிய அன்பிற்கினிய தாய்மார்களே! சகோதரிகளே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காலையில் கோவையில் நடைபெற்ற அரசு விழா. அதைத் தொடர்ந்து இந்த திருப்பூர் மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த அரசு விழாவில் பங்கேற்று உரையாற்றுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

திருப்பூருக்கு எத்தனையோ சிறப்புக்கள் உண்டு, பெருமைகள் உண்டு. வரலாற்றில் பதிவாகியிருக்கக்கூடிய பெருமைகளையெல்லாம் தொடர்ந்து நாம் எடுத்துச் சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறோம். நம்மை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா, பேரறிஞர் அண்ணா அவர்களை ஆளாக்கிய தந்தை பெரியார், இந்த இருபெரும் தலைவர்களும் முதன்முதலில் சந்தித்த பகுதி எந்தப் பகுதி என்று கேட்டால், இந்த திருப்பூர் பகுதிதான். அப்படிப்பட்ட வரலாற்றில் பதிவாகியிருக்கக்கூடிய இந்த திருப்பூரில் நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் சந்தித்து நலத்திட்ட உதவிகளை தொடங்கிவைத்து, அதைத் தொடர்ந்து, உரையாடக்கூடிய வாய்ப்பினை பெற்றமைக்கு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

அரசின் பல்வேறு நலத்திட்டங்களை வழங்குவதற்காக நான் திருப்பூருக்கு வந்திருக்கிறேன். சாதாரணமாக அல்ல, பூரிப்போடு, முக மலர்ச்சியோடு, பெருமையோடு எப்படி நீங்கள் வந்திருக்கிறீர்களோ அதேபோல நானும் வந்திருக்கிறேன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பதை இன்றைக்கு இந்த திருப்பூரிலே நேரடியாக, உங்கள் மூலமாக அந்த சிரிப்பை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

4,335 பயனாளிகளுக்கு 55 கோடியே 61 இலட்சம் ரூபாய் நிதி உதவி செய்யப்பட்டுள்ளது. அதாவது 4,335 பயனாளிகள் என்று சொன்னால் 4,335 குடும்பங்கள் பயன் அடைகிறது என்பதை நீங்கள் உணர்ந்திட வேண்டும்.

இன்னொன்றைச் சொல்லியாக வேண்டும். இந்த நிகழ்ச்சி நடத்தவேண்டும் என்று இரண்டு நாட்களுக்கு முன்தான் முடிவெடுத்தோம். ஏற்கனவே கோவையில் நிகழ்ச்சிக்கு தேதி வழங்கி அந்த நிகழ்ச்சி நடப்பதற்கான பணிகள் நடந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் இந்த மாவட்டத்தைச் சார்ந்திருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர்கள் திரு. சாமிநாதன் அவர்களும், திருமதி. கயல்விழி செல்வராஜ் அவர்களும் என்னைச் சந்தித்து, கோவைக்கு வருகிற நீங்கள் மாலையில் திருப்பூருக்கு வந்தால், நாங்கள் அரசின் சார்பில் நிகழ்ச்சி நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்புதான் சொன்னார்கள். இரண்டு நாட்களில் முடியுமா? அது சாத்தியப்படுமா என்று நான் கேட்டபோது, நீங்கள் தேதியைத் தாருங்கள், நாங்கள் அதை முடித்துக் காட்டுகிறோம் என்று சொன்னார்கள். முடித்து மட்டுமல்ல, வெற்றியோடு இந்த நிகழ்ச்சியை நடத்தக்கூடிய வாய்ப்பை அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக நான் உங்கள் அனைவரின் சார்பில், அரசின் சார்பில், முதலமைச்சர் என்ற முறையில் அமைச்சர்களாக இருக்கக்கூடிய திரு.சாமிநாதன் அவர்களுக்கும், திருமதி கயல்விழி செல்வராஜ் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை, பாராட்டுக்களை, நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மொத்தம் 18 அரசுத் துறைகளின் சார்பில் இந்த நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

- அடுக்குமாடிக் குடியிருப்பு ஆணையை பெற்றிருக்கிறார்கள்.
- சிறுகுறு தொழில் செய்ய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.
- பெண் குழந்தைகள் பாதுகாப்பு பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.
- வீட்டுமனைப் பட்டா தரப்பட்டுள்ளது.
- முதியோர் உதவித் தொகை, கைம்பெண் உதவித் தொகை தரப்பட்டுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிகள் செய்யப்பட்டுள்ளது.
- குடும்ப அட்டைகள், மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகள் தரப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்தபோது, உங்களால் இந்த ஆட்சி எங்களிடத்தில் ஒப்படைத்தபோது நான் சொன்னேன் " ஒரு கட்சியின் அரசாக இது இருக்காது. ஒரு இனத்தின் அரசாக இது வெற்றி நடைபோடும்" என்று நான் அப்போதே எடுத்துச் சொன்னேன்.

அப்படி தமிழ்ச்சமுதாயத்தின் பல்வேறு தரப்பினருக்கும் இந்த மேடையில் உதவிகள் தரப்பட இருக்கிறது. அனைத்துத்தரப்புத் தமிழர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்தக்கூடிய நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பயனாளிகளுக்கு வங்கிக் கடன் வழங்குவதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன். 660 சுய உதவிக் குழுக்களுக்கு 25 கோடி ரூபாய் அளவில் கடனுதவிகள் வழங்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியை நான் நினைத்துப் பார்க்கும்போது, இந்த மேடையில் நான் நின்றுகொண்டிருக்கும்போது எனது நினைவுகள் பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு செல்கின்றன, அப்போது நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தேன், துணை முதலமைச்சராக இருந்தேன். அப்போதும், இதேபோல்தான் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏராளமான நிதி உதவிகளை, அது மானியத் தொகையாக இருந்தாலும், கடனாக இருந்தாலும், சுழல் நிதியாக இருந்தாலும் அன்றைக்கு வழங்கிய அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

ஒரு அரசு நிகழ்ச்சி என்று சொன்னால், அந்த அரசு நிகழ்ச்சிக்கு அமைச்சர்களோ அல்லது அதிகாரிகளோ அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகளோ வந்து அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது உண்டு. ஒரு 500 நபர்களுக்கு அந்த உதவிகள் போய்ச் சேரவேண்டும். ஆனால் அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்ளக்கூடிய அமைச்சர்களாக இருந்தாலும், அதிகாரிகளாக இருந்தாலும், அல்லது மக்கள் பிரதிநிதிகளாக இருந்தாலும், அடையாளத்திற்கு 10 நபர்களுக்கு கொடுத்துவிட்டு, மீதம் உள்ளவற்றை அதிகாரிகள் வீடுதேடி வந்து கொடுப்பார்கள் அல்லது நீங்கள் அலுவலகத்திற்கு சென்று வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு

சென்றுவிடுவார்கள். அதுதான் ஏற்கனவே நடைமுறையில் இருந்துகொண்டிருந்த ஒன்று.

ஆனால், மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரை நான் எப்படி மாற்றினேன் என்றால், ஏற்கனவே திமுக ஆட்சி இருந்தபோது, நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, துணை முதலமைச்சராக இருந்தபோது, 5 நபர்கள், 10 நபர்களுக்கு எல்லாம் நான் கொடுக்க வரமாட்டேன். எத்தனை நபர்கள் அதை வாங்குவதற்காக வந்திருக்கிறார்களோ, அது 500 நபர்களாக இருந்தாலும், 5,000 நபர்களாக இருந்தாலும், 10,000 நபர்களாக இருந்தாலும் அனைவருக்கும் நான் கொடுத்துவிட்டுத் தான் செல்வேன் என்று சொல்லி, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, அதை முறைப்படுத்தி, வரிசைப்படுத்தி ஒவ்வொருவருக்கும் நம்பர் கொடுத்து வரிசையாக உட்கார வைத்து, வரிசையாக அதைப் பெற்றுக் கொண்டு செல்வார்கள், அதைத்தான் நினைத்துப் பார்க்கிறேன். காலையில் 10.00 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கினால் இரண்டு, மூன்று மணிக்குக் கூட முடிந்திருக்கிறது. என் அருகிலிருக்கும் அமைச்சர்களுக்கெல்லாம் கால் வலி வந்துவிடும். இடையில் அவர்கள் தண்ணீரோ, காபியோ அல்லது தேநீரோ அருந்திவிட்டு சிறிது ஓய்வு எடுத்துவிட்டு வருவார்கள் - ஆனால் நான் அப்படியில்லை. எப்போது நிற்கத் தொடங்கி கொடுக்க ஆரம்பிக்கிறேனோ அந்த 5000 பேருக்கும் கொடுத்து முடிக்கும் வரைக்கும் அதே மேடையில் இருந்தேன். நான் பெருமைக்காக சொல்கிறேன் என்று நினைக்காதீர்கள். அது அவர்களுக்கு முழுமையாகச் சேரவேண்டும். 10 நபர்களுக்குக் கொடுத்துவிட்டு சென்றுவிட்டால், மீதமுள்ளவர்களுக்கு சில நேரங்களில் சேராமல் போய்விடுகிறது. எனவே, முழுமையாகச் சென்று சேரவேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் கொள்கையை நான் மனதில் பதியவைத்து, அனைவருக்கும் நான் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறேன்.

அதைப் பெற்றுக்கொள்ள வரக்கூடிய தாய்மார்கள் என்னிடத்தில் உரிமையோடு கேட்பார்கள், நாங்களாவது உட்கார்ந்து கொண்டிருக்கிறோம், நீ கூப்பிடும்போதுதான் மேடைக்கு வந்து வாங்கிக் கொண்டு சென்றுவிடுகிறோம். ஆனால் கொடுக்கின்ற நீ 10 மணியிலிருந்து நின்றுகொண்டு இரண்டு மணிவரைக்கும், மூன்று மணிவரைக்கும் நின்று கொண்டேயிருக்கின்றாயே,

உனக்கு கால் எல்லாம் வலிக்காதா என்று உரிமையோடு சில தாய்மார்கள் கேட்பார்கள், அப்போது நான் சொல்வேன், நான் அதைக் கொடுக்கின்றபோது உங்கள் முகத்தைப் பார்க்கிறேன், உங்கள் முக மலர்ச்சியை பார்த்த பிறகு என் கால்வலி தானாகப் பறந்து சென்றுவிடுகிறது என்று நான் சொல்வேன். அதைத்தான் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

ஏராளமான நிதி உதவிகளைப் பெறுவதற்காக, கடன் உதவிகளை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் என்பது மகத்தான எத்தனையோ திட்டங்களை இந்த நாட்டுக்குக் கொடுத்திருக்கக்கூடிய ஒரு இயக்கம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்றாலே உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்திய ஆட்சி என்று அன்றைக்கு பெயர் எடுத்தோம். ஆனால், அது கடந்த காலத்தில் எப்படிப் போனது என்று உங்களுக்குத் தெரியும். நான் அதையெல்லாம் பேசி நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை, அரசியல் பேசுவதற்கு நான் தயாராக இல்லை, அதற்கு தனி மேடை இருக்கிறது. எனவே, அதை நான் விரிவுபடுத்தி, விமர்ச்சித்து பேச நான் தயாராக இல்லை.

நாம் ஆட்சியில் ஏற்கனவே இருந்தபோது,

நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சி திட்டம், தந்தை பெரியார் பெயரில் சமத்துவபுரங்கள், கான்கிரீட் வீடுகள், கான்கிரீட் சாலைகள், மினிபஸ்கள், கிராமப்புற ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி விருது, கலைஞர் காப்பீட்டுத் திட்டம், 108 என்கிற ஆம்புலென்ஸ், மகப்பேறு நிதி உதவித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம், இதயம் காப்போம் பாதுகாப்புத் திட்டம், திருமண நிதி உதவித் திட்டம், கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம், கைம்பெண் மறுமண நிதிஉதவித் திட்டம், கைம்பெண் தாய்மார்களின் மகள் திருமண நிதியுதவித் திட்டம், ஆதரவற்ற பெண்களுக்கான திருமண உதவிநலத் திட்டம், திருநங்கைகள் நலவாரியம்

இப்படி ஏராளமான திட்டங்களை நாம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம். இந்த வரிசையில் சொல்லக்கூடிய ஒரு சிறப்பான திட்டம்தான் மகளிர் சுய உதவிக் குழு திட்டம். 1989 - ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தர்மபுரி மாவட்டத்தில்

முதன்முதலாக இந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போது சொன்னார், பெண்கள் தன்மானத்தோடு வாழவேண்டும், யாருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது, தன்னம்பிக்கையோடு அவர்கள் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த மகளிர் சுய உதவிக் குழு என்கின்ற திட்டத்தை தொடங்கிவைத்தார்கள் என்று. இரத்த பேதம் இல்லை, பால் பேதம் இல்லை என்பதை வலியுறுத்துவதற்காகத் தான் திராவிட இயக்கத்தை தந்தை பெரியார் அவர்கள் தொடங்கினார்கள். அந்த இலட்சிய அடித்தளத்தில் உருவான திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, பெண்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும், யாருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

ஆனால் கடந்த காலத்தில், குறிப்பாக, கடந்த பத்து ஆண்டுகால ஆட்சியில் அந்த மகளிர் சுய உதவிக் குழு எந்த அளவிற்கு மோசமான நிலைக்குப் போனது என்பது உங்களுக்கு தெரியும். நாங்கள் ஆட்சியில் இருந்தபொழுது வங்கிக்கு சென்று கடன் உதவி கேட்கும்பொழுது உட்கார வைத்து, காபி கொடுத்து அவர்கள் கேட்பதை கொடுத்து அனுப்புவார்கள். ஆனால் கடந்த 10 ஆண்டு காலத்திலே மகளிர் சுயஉதவிக்குழு சின்னாபின்னம் ஆக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அதனை மீண்டும் முழுமையாக புதுப்பிக்கத் திட்டமிட்டு, இன்றைய நாள் 25 கோடி ரூபாய் மதிப்பிலான கடனுதவிகள் இந்த நிகழ்ச்சியின் மூலமாக வழங்கப்படவிருக்கிறது. ஏற்கனவே, கடந்த ஆறு மாதகாலத்தில் திருப்பூர் மாவட்டத்தில் 230 கோடி ரூபாய் கடனாக 5,420 குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கழக ஆட்சி மலர்ந்ததும் - முதலமைச்சராக நான் பொறுப்பேற்றவுடன் ஐந்து முக்கியமான அறிவிப்புகளை நான் வெளியிட்டேன். அதில் முக்கியமானது.

மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணம். அதேபோல, மகளிர் சுய உதவிக்குழுக்கள் கூட்டுறவு வங்கியில் வாங்கிய கடன் முழுவதும் நான் ஆட்சிக்கு வந்தவுடன் இரத்து செய்திருக்கிறேன். இது மகளிர் சமுதாயம் மீது இந்த ஆட்சி வைத்திருக்கக்கூடிய அக்கறையினுடைய வெளிப்பாடு. இதுபோன்று ஏராளமான

திட்டங்களை மகளிருக்காக நிறைவேற்றியது மட்டுமல்ல, இன்னும் நிறைவேற்றப் போகிறோம்.

இந்த விழாவில் ஏராளமான கட்டங்கள் திறப்பு விழாவை நடத்தி இருக்கிறோம்.

- ❖ திருப்பூர் புதுராமகிருஷ்ணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையம்

- ❖ திருப்பூர் மாவட்டத்தில் 11 அரசுத் துறைகளின் சார்பில் ரூ. 2,381 இலட்சம் மதிப்பிலான திட்டப்பணிகள் முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- ❖ குண்டடம் வட்டாரம் கொழுமங்குழி ஊராட்சி மன்றக் கட்டடம் கட்டுவதற்கும், மாம்பாடி ஊராட்சி புளியம்பட்டி கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இது விரைவில் திறந்து வைக்கப்பட இருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- ❖ திருப்பூர் மாவட்டம் என்பது ஒரு தொழில் மாவட்டம். அதிலும் குறிப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் களஞ்சியமாக இந்த மாவட்டம் விளங்கிக் கொண்டு இருக்கிறது. கொரோனா காலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவிடவும் அவற்றின் வளர்ச்சிக்காகவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளைச் செய்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

- ❖ குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், 2,239 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ.179.19 கோடி முதலீட்டு மானியமாக தரப்பட்டது.

- ❖ வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் கடன் பெறக்கூடிய நேர்வுகளில் சொத்து ஆவணங்களை இணைய வழியாகப் பதிவு செய்ய வகைசெய்யக்கூடிய சட்டம் சட்டமன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறோம்.

- ❖ மாநில கடன் உத்தரவாத நிதியம் ஏற்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. ரூ. 100 கோடி வைப்பு நிதியுடன் அது விரைவில் செயல்படத் தொடங்கும். சென்னை மாநகரப் பகுதி போன்றே கோவை மாநகரத்தினுடைய வளர்ச்சிக்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பதற்காக, கோவை நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம் ஏற்படுத்தும் என்று காலையில் நடந்த நிகழ்வில் ஒரு அறிவிப்பை நான் வெளியிட்டேன். சென்னை, கோவை மட்டுமல்ல, நமது திருப்பூர் மாவட்டத்தின் வளர்ச்சியையும் மனதில் வைத்து திருப்பூர் நகர்ப்புற வளர்ச்சிக் குழுமம் அமைக்கப்படுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்த வேளையில் உங்களிடம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- ❖ புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானிய உச்ச வரம்பு ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இப்படி ஏராளமாக இருக்கிறது. இதைச்

சொல்வதற்குக் காரணம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாடு அடைவதன் மூலமாகத்தான் ஏழை, எளிய நடுத்தர மக்கள் உயர்வடைய முடியும். அவர்களை நெஞ்சில் வைத்து ஏராளமான திட்டங்களை நம்முடைய அரசு தீட்டி வருகிறது.

ஆட்சிக்கு வந்து 6 மாத காலம் தான் ஆகியிருக்கிறது. இன்னும் நான்கரை வருடம் இருக்கிறது. 6 மாதத்தில் இப்படி பணிகளை செய்திருக்கிறோம் என்றால் நான்கரை ஆண்டிற்கு இன்னும் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதை நீங்களே உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால் ஓராண்டு, ஈராண்டு அளவுக்கு சாதனைகளை இந்த 6 மாதத்தில் செய்து முடித்திருக்கிறோம். இந்தச் சாதனைகளை தமிழ்நாடு மட்டுமல்ல, இங்கே கூட திரு. ஆ. இராசா அவர்கள் பேசினார்கள். மற்றவர்களும் தொடர்ந்து பேசியிருக்கிறார்கள். அகில இந்திய பத்திரிகைகள் பாராட்டுகிறது. அடுத்த மாநிலங்களின் பாராட்டுதல்கள் மட்டுமல்ல, வெளிநாடுகளில் இருந்துகூட பாராட்டுகள் வந்து குவிகிறது. எல்லா பத்திரிகைகளும் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். பக்கத்து மாநிலங்களான ஆந்திரா, - கேரளாவைச் சேர்ந்த ஊடகங்களில் நம்முடைய அரசின் செயல்பாட்டைப் பாராட்டி தொடர்ந்து அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஒளிபரப்பி வருகிறார்கள்.

இவற்றையெல்லாம், தனிப்பட்ட இந்த ஸ்டாலினுக்குக் கிடைத்த பாராட்டாக நான் நினைக்கவில்லை. தமிழ்நாட்டு மக்களாகிய உங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டாகத்தான் நினைக்கிறேன். ஆகவே, பல்வேறு மாநிலத்தினுடைய முதலமைச்சர் பட்டியல்களை எல்லாம் வெளியிட்டு இதில் நம்பர் 1 ஸ்டாலின், நம்பர் 1 முதலமைச்சர் என்று சொல்கிறார்கள். பெருமைதான், மகிழ்ச்சிதான். எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் சேர்த்துதான் சொல்கிறேன். நம்பர் 1 முதலமைச்சர் ஸ்டாலின் என்று சொல்வதைவிட நம்பர் 1 தமிழ்நாடு என்று சொல்லக்கூடிய நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

ஆகவே, 'உங்களுக்காக உழைக்கக் காத்திருக்கிறோம் - எங்களுக்கு நீங்கள் உத்தரவிடுங்கள்' – அதை முடிக்கத் தயாராக இருக்கிறோம் எங்கள் மீது நம்பிக்கை வைத்து நீங்கள் வாக்களித்தீர்கள். வாக்களித்த மக்களுக்கு மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் பணியாற்றி கொண்டிருக்கிறோம். ஐந்து மாதங்கள் மட்டுமல்ல, இந்த ஐந்து ஆண்டுகளும் திமுக ஆட்சி இப்படித்தான் செயல்படும், பணியாற்றும் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவித்து,

பாட்டாளிகள், தொழிலாளிகள், உழவர்கள், எழை எளிய நடுத்தர மக்கள், பட்டியலின பழங்குடி மக்கள், சிறுபான்மையினர் -பெண்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கையர்கள் என அனைவரின் பிரதிநிதியாகத்தான் நான் இந்த முதலமைச்சர் இருக்கையில் உட்கார்ந்திருக்கிறேன். ஆகவே அவர்களுக்கு நன்மைகள் செய்வதற்காகத் தான் நான் முதலமைச்சராக பொறுப்பேற்று இருக்கிறேன். உங்களில் ஒருவனாக இருந்து ஆட்சி நடத்த நான் தயார். நீங்களும் துணைநிற்க, எங்களுக்கு ஆதரவு தர தொடர்ந்து எங்களை உற்சாகப்படுத்துங்கள், எங்களை ஊக்கப்படுத்துங்கள் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**